


தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் பணிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஜெய் சாந்தி மஹாலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் முன்னாள் எம்.பி.க்கள் ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அய்யப்பன், முத்துச்செல்வி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## தி.மு.க கூட்டணியை யாராலும் நெருங்க முடியாது!

# 200 தொகுதிகளில் வெற்றிப் பெற்று மீண்டும் ‘ஸ்டாலின் 2.0’ ஆட்சி அமைவது உறுதி!

## நெல்லையில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, மார்ச் 16 –

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்த சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களை சந்தித்தார்.அப்போது அவர் தெரிவித்ததாவது.

பெட்ரோல்,டீசல் விலை முழுமையாக ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது.இது அனைவருக்கும் தெரியும் சரியான நிர்வாக திறன் இல்லாததே இந்த சிலிண்டர் தட்டுப்பாடிற்கு காரணம். பிரதமர் மோடி கடந்த 11 ஆண்டுகளில் உலக நாடுகள் முழுவதையும் சுற்றி வருவதால் எந்தப் பயனும் இல்லை.பல நாடுகளுக்குப் போய் வந்தோம் என்பது பெருமையல்ல;எந்த நாடோடு என்ன உறவு வைத்துள் ளோம் என்பதே முக்கியம்.அண்டை நாடுகள் கூட இன்று இந்தியாவை மதிப்பதில்லை.இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஆனால், அமெரிக்க அதிபர் ட்ரம்ப், இந்தியப் பிரதமரைப் பார்த்து, ”ஒரு 30 நாளைக்கு மட்டும் ரஷ்யாவில் கச்சா எண்ணெய் வாங்கிக்கொள்ளுங்கள் என்று அமெரிக்கா அனுமதி தரும் அளவுக்கு இந்தியாவின் நிலை உள்ளது.150 கோடி மக்களின் பிரதிநிதியான பிரதமர் இதற்கு எந்த எதிர்வினையும் ஆற்றவில்லை.

அமெரிக்க வர்த்தகத்துறை துணை அமைச்சர் டெல்லிக்கு வந்து அமர்ந்துகொண்டு, இந்தியாவிற்கு லாபம் தரும் எந்த வர்த்தகத்தையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று கூறுகிறார்.இதற்கு ஒன்றிய அரசு எந்த எதிர்வினையும் ஆற்றவில்லை.

**நாட்டுக்கு எந்த லாபமும் இல்லை!**

ஆனால்,முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்க மண்ணில் நின்றுகொண்டே,ஈராக் மீதான அமெரிக்காவின் போர் நடவடிக்கையைத் தவறு என்று சுட்டிக்காட்டினார். இதுதான் உண்மையான தைரியம். பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்களால் நாட்டுக்கு எந்த லாபமும் இல்லை; அதானிக்கும்,அம்பானிக்கும்தான் லாபம். இலங்கையில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் திட்டங்களை அதானிக்குக் கொடுக்கச் சொல்லி மிரட்டுகிறார்கள்.அண்டை நாடுகள் கூட இன்று நம்மை மதிப்பதில்லை. தூத்துக்குடி மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் வன்மையாக கண்டிக்கத்தக்கது.பொள்ளாச்சி, தூத்துக்குடி,கோயம்புத்தூர் என எந்தப் பிரச் சினையாக இருந்தாலும், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி உடனடியாகத் தண்டனை வாங்கிக் கொடுப்பதுதான் முதல்வர் அவர்களின் ஸ்டைல்.முந்தைய அ.தி.மு.க ஆட்சியைப் போல போலி குற்றவாளிகளை நாங்கள் உருவாக்குவதில்லை.மேலும், இளைஞர்களைத் தொழில் முனைவோராக மாற்றுவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னிலையில் உள்ளது.

**வேடிக்கையாக உள்ளது!**

விஜய் முதல் கூட்டத்திலேயே மற்றவர்கள் எழுதிக் கொடுக்கும் ஸ்கிரிப்டைப் படித்து,நான் முதல்வர் ஆகிறேன் என்று கூறுவது வேடிக்கையாக உள்ளது.மக்கள் பிரச்சனைகளுக்காக அவர் எந்தத் தெருவிலும் இறங்கிப் போராட வில்லை.த.வெ.க.வின் பின்னணியில் புஸ்ஸி ஆனந்த் மற்றும் அமித்ஷா உள்ளனர்.

விஜய்க்கு வருமான வரிச் சோதனைக்கு அனுப்பப்பட்ட ஐ.ஆர்.எஸ். அதிகாரியான வருண் ராஜாதான் தற்போது த.வெ.க.வில் பொறுப்பில் உள்ளார்.அக்கட்சியைச் சேர்ந்த ஆதவ் அர்ஜுனாவின் மாமனார் இந்தியா முழுவதும் லாட்டரி வியாபாரம் செய்கிறார். அதற்கு பிரதமரின் தயவுதான் தேவை.எடப்பாடியின் தயவு தேவையில்லை.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு, 125 மாவட்டச் செயலாளர்களை வைத்து புஸ்ஸி ஆனந்த் ஒரு கூட்டம் நடத்தினார்.அதில்,பா.ஜ.க கூட்டணியில் இணையலாமா? என்று கேட்கப்பட்டதற்குப் பெரும்பாலானவர்கள் ”போகலாம் என்றே முடிவெடுத்துள்ளனர். இதனையும் புஸ்ஸி ஆனந்தே கூறுகிறார்.கைப் புண்ணிற்கு கண்ணாடி தேவையில்லை நடிகர் விஜய் பா.ஜ.க கூட்டணியுடன் இணைவார் என நான் பல முறை கூறியுள்ளேன், பா.ஜ.க.வின் அசைன்மன்டைத்தான் விஜய் செய்கிறார்.கூட்டணி குறித்து பேச செல்கிறேன் என கூறிகொண்டு எடப்பாடி பழனிசாமி,டெல்லியில் உள்ள அமித்ஷா வீட்டிற்குத்தான் ஒரு பியூன் போலச் சென்று ரகசியமாகப் பேரம் பேசி வருகிறார்.

மேடையில் எடப்பாடியை வைத்துக்கொண்டே ‘கூட்டணி ஆட்சி’ என்று பா.ஜ.க சொல்கிறது. அவர் கீழே இறங்கி வந்து ‘என் தலைமையில் தான் ஆட்சி’ என்கிறார்.எடப்பாடியை அழிப்பதுதான் பா.ஜ.க.வின் முக்கிய டார்கெட். அதற்காகவே முடக்கப்பட்ட நிதியை விடுவித்து சசிகலாவை கட்சி ஆரம்பிக்கச் சொல்லியவர் பிரதமர் மோடிதான்.டி.டி.வி தினகரனை உள்ளே இருந்தே

அ.தி.மு.க.வைக் காலி செய்ய வைத்துள்ளனர்.பாட்டாளி மக்கள் கட்சிக்கு என ஒரு கொள்கை உள்ளது. ஆனால் அக்கட்சிக்கு இப்போது சின்னம் கிடையாது. அன்புமணி ராமதாஸ் கூட வரப்போகும் தேர்தலில் பா.ஜ.க.வின் தாமரை சின்னத்தில்தான் நிற்க வேண்டிய சூழலை ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளது.

**மீண்டும் ஸ்டாலின் 2.0அமைவது உறுதி!**

பா.ஜ.க.வின் இத்தகைய அரசியலையும், சித்தாந்தத் தாக்குதல்களையும் கொள்கை ரீதியாக எதிர்த்துத் துணிந்து நிற்கும் ஒரே தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மட்டும்தான்.விஜய் எந்த கூட்டணியில் சேர்ந்தாலும்,இவர்கள் எத்தனை கூட்டணிகள் அமைத்து வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியை யாராலும் நெருங்க முடியாது. 2026 தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் ‘ஸ்டாலின் 2.0’ ஆட்சி அமைவது உறுதி.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

## ஊழல் பெருச்சாளிகளை மேடையிலேயே வைத்துக்கொண்டு

# பிரதமர் மோடி ஊழலைப் பற்றிப் பேசலாமா?

என் உயிரினும் மேலான தமிழ் சொந்தங்களே!

அரசியல் விமர்சனங்களை ஆரம்பிப்ப தற்கு முன்னால்... நான் தொலைக்காட்சியில் கண்ணால் பார்த்த காட்சியை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்பு கிறேன். திருச்சி மேடையில் பாரதப் பிரதமர் பேசிக் கொண்டிருக்கும்போது, அவரது பேச்சில் இரண்டாவது பகுதியில் மேடையில் அமர்ந்திருக்கும் ஏனைய கூட்டணிக் கட்சித் தலைவர்களின் குளோசப் காட்டப்படுகிறது. எல்லோரும் எவ்வளவு உற்சாகமாக இருந்திருக்க வேண்டும்? இருந்தார்களா? இல்லை ஏன்? எனக்காக தயவுசெய்து மறுமுறை யூடியூபில் அந்த இடத்தை போட்டுப் பாருங்கள். சலிப்பு, களைப்பு, சொந்தக் கணிப்பு.

அனைத்துக் காரணங்களினாலும் ஏதோ ஒரு சோகம் நடந்த வீட்டில் அமர்ந்திருப்பது போல் அனைவரும் அமர்ந்திருப்பது உங்களுக்குத் தென்படுகிறதா? அதற்கு என்ன காரணம்? எனக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்? பிரதமர் அவர்கள் ஊழலைப் பற்றி பேசும்போது தமிழ்நாட்டில் ஊழல் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராகி விட்டனர் என்று சொன்னார். பிரதமர் அவர்களே நீங்கள் சொல்வது உண்மை என்றால் கடந்த ஒரே மாதத்தில் தாங்கள் ஏன் மதுராந்தகம், மதுரை, திருச்சி என மூன்று இடங்களில் கூட்டம் நடத்த வேண்டும்?

டெல்லியில் தங்களுக்கு வேறு வேலையே இல்லையா? அல்லது இங்கே உள்ள உங்கள் கூட்டணி தலைவர்கள் நீங்கள் பேசும்போது அரைகுறை தூக்கத்தில் இருப்பதை பார்க்க வேண்டும் என்ற ஆசையா? ஒரு குடும்பம் பற்றிய அக்கறையோடு பேசினீர்கள், உங்களுக்குத் தெரியாதது அல்ல,

சொல்லுகிறேன். பேரறிஞர் அண்ணா அரசியல் கட்சி ஆரம்பித்த பின்னால்... தலைவர் பதவியை... அதற்கான நாற்காலியை காலியாகவே வைத்தி ருந்தார். யாருக்காக? தந்தை பெரியாருக்காக. அவர் என்ன பேரறிஞர் அண்ணாவின் சொந்த அப்பாவா? அடுத்தது அண்ணா இறந்தபோது கலைஞர் கண்ணீரோடு கேட்டார், அண்ணா, உங்கள் இதயத்தை எனக்கு இரவலாக தந்து விட்டுப் போங்கள். நான் வரும்போது அதை பத்திரமாக எடுத்து வந்து உங்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன் என்று சொன்னார். அவரின் கடைசி ஆசை தன்னை அண்ணாவின் காலடியில் புதைக்க வேண்டும் என்பதுதான். அதை போராடி நிறைவேற்றினார் ஸ்டாலின் அவர்கள்.

ஏன்? அண்ணாவும் கலைஞரும் உடன் பிறந்த சகோதரர்களா? இறந்த பின்பும் அண்ணா காலடியில் தான் புதைக்கப்படு வதை கலைஞர் விரும்பினாரே? ஏன்? இது மாதிரி உலகிலே வேறு எங்கேயாவது அரசியல் இயக்கம் கண்டதுண்டா? திராவிட இயக்கம் என்பதே ஒரே குடும்பம் தான். பாரதப் பிரதமர் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.


‘தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை’ தசரதன் தன் மகன் ராமனை அழைத்து.. நீ காட்டுக்குப் போ. உன் தம்பி பரதன் நாடாளட்டும் எனச் சொல்லவில்லை. தசரதன் சொன்னதாக சித்தி கைகேயி சொன்னதைக் கேட்டு அது உண்மையா பொய்யா என்று கூட விசாரிக்காமல் காடேகினான் ராமன். அந்த ராமனை வணங்குகின்ற பிரதமர் அவர்கள், ராமதாஸ் அய்யா அவர்களின் மகனை தன் கூட்டணியில் இணைத்துக் கொண்டது நியாயமா? அவர் மாநாட்டிலே பொங்கினாரே.

அதெல்லாம் உண்மையா? இந்த அன்பிலா மணி ஒரே ஒரு தடவை மத்திய அமைச்சராக இருந்தாரே! அது கலைஞர் அவர்களால் அவருக்குக் கிடைத்ததல்லவா? அதற்கான நன்றியைத் தான் இந்த மேடையில் அவர் தெரிவித்திருக்கிறார். அது போகட்டும், இவர் மேலயும் ஊழல் குற்றச்சாட்டு இருக்காமே? அது உண்மையா? மேடையிலே அமர்ந்திருந்த பல பேர் மேல பல குற்றச்சாட்டுகள் இருப்பதாக பேசிக் கொண்டார்களே.

அப்புறம் விஞ்ஞான ஊழல் என்று ஏதேதோ பேசினார் பிரதமர் அவர்கள். ஜெர்மனியில் இருந்து போர் விமானங்களை வாங்கினதுல ஊழல் நடந்ததா பேசிக்கிட்டாங்க. அது உண்மையா, பொய்யா என்று தெரியாம நான் பேசக்கூடாது. ஆனால், மல்லையா, நீரவ்மோடி, லலித் மோடி, இப்படி பல பெருச்சாளிங்க இந்தியாவை விட்டு தப்பிப்போய் ஜாலியா வெளிநாடுகளில் வாழறதும்.. ஆளும் கட்சி தேர்தல்களுக்கு கார்ப்பரேட்டுகள் இடமிருந்து தேர்தல் நிதி பெறுவதும் கமிஷன் ஊழல் என்று சொல்லலாமா?

மேடையில முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்கள் பிரதமர் அருகே சென்று ஏதோ சொன்னதும் பிரதமர் அவர்கள் வாய்விட்டு சிரித்தார். அமைச்சர் மேல நடந்த ரைடு, அவர் வீட்ல கண்டு பிடிக்கப்பட்ட ஆதாரங்கள் எல்லாத்தையும் நெனச்சுத்தான் பிரதமர் சிரித்தாரா? தவழ்ந்து தவழ்ந்து காலை பிடிச்சு பதவி வாங்கினவரு, இப்ப வாலை பிடிச்சாவது பதவிக்கு வர முயல்வதில் தப்பே இல்லை.


ஆனால் அம்மா கதை எப்படி முடிந்தது? கொட நாட்டுக் கொலைகள் ஏன் நடந்தன? இதுக்கெல்லாம் விளக்கம் வராத நிலையில் இவங்களோட நம்ம பாரதப் பிரதமர் கூட்டணி வைப்பதும் இவர்களுக்காக மாதம் மூன்று தடவை தமிழ்நாட்டுக்குவருவதும்நியாயம்தானா? நான் கேட்கவில்லை, மக்கள் கேட்கிறார்கள்.



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்

## தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!




## மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 17 | காலை 9.00 மணி | நாங்குநேரி | களக்காடு நாங்குனேரி, பாளையங்கோட்டை ஆகிய ஒன்றியங்கள் திருக்குறுங்குடி மூலக்கரைப்பட்டி ஆகிய பேரூர்கள் | அழகு மஹால் செங்குளம் நாங்குநேரி |
| மார்ச் 17 | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | பாளையங்கோட்டை மானூர் ஆகிய ஒன்றியங்கள், சங்கர்நகர், நாராணம்மாள்புரம் ஆகிய பேரூர்கள் | அமோகா பேலஸ் தச்சநல்லூர் பாளையங்கோட்டை |
| | | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை வடக்கு, மேலப்பாளையம் கிழக்கு மேலப்பாளையம் மேற்கு ஆகிய பகுதிகள் | |
| மார்ச் 17 | இரவு 7.00 மணி | அம்பாசமுத்திரம் | சேரன்மாதேவி ஒன்றியம் அம்பாசமுத்திரம் நகரம், கல்லிடைக்குறிச்சி, கோபால சமுத்திரம், சேரமன்மாதேவி, மணிமுத்தாறு, மேலசேவல், விக்கிரமசிங்கபுரம், வீரவநல்லூர் ஆகிய பேரூர்கள் | எஸ்.எல்.எம். மண்டபம் வீரவநல்லூர் அம்பா சமுத்திரம் |

**இவண் - தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன், திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் கிரகாம்பெல், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப்.**

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (17.03.2026 – செவ்வாய்க் கிழமை) மாலை 05.00 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் 23.04.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் குறித்தும் கீழ்கண்ட பொருள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள்,மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மற்றும் மாநில அணிகளின் துணை செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:**

தேர்தல் பிரச்சாரம் மற்றும் வாக்கு சேகரித்தல் பணி திட்டமிடுதல்.
கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு ஒருமித்த கருத்தோடு பணியாற்றுதல்.
கழக ஆக்கப் பணிகள்

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர்
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

## திருப்பத்தூர், ஆபத்தாரனம்பட்டி கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்பு

# ரூ. 2.75,கோடியில் தார் சாலை அமைக்கும் பணி!


## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, மார்ச் 17 -*

*சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி ஏரியூர் அருகே ஆபத்தாரனம்பட்டி என்ற கிராமம் உள்ளது. . ஆபத்தாரனம்பட்டி கிராமத்திலிருந்து உலகினிபட்டி வரையிலும், ஆபத்தாரனம் பட்டியிலிருந்து சிவகங்கை புறவழிச்சாலை வரை இணைக்கும் சாலை வசதி வேண்டும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பனிடம் கிராம மக்கள் கோரிக்கை வைத்தார்கள்.அவர்களின் கோரிக்கையை ஏற்று மெட்டல் சாலை தற்காலிகமாக அமைக்கப்பட்டது. .தற்பொழுது இந்த இரண்டு பகுதிகளுக்கும் தார் சாலை ஏற்படுத்த வேண்டும் என்று அப்பகுதி கிராம மக்கள்அமைச்சரிடம் கோரிக்கை வைத்தார்கள். அப்பகுதி கிராமமக்களின் கோரிக்கையை ஏற்று ரூபாய் 2 கோடியே 73 லட்சத்து 31ஆயிரம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின் கீழ் புதிதாக தார் சாலை அமைக்கும் பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தொடங்கி வைத்தார் .இந்த நிகழ்ச்சியில் கே.பூமிநாதன் எம்எல்.ஏ. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், .நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்ட பொறியாளர் திருமேனி ஒன்றிய செயலாளர் கே .பாலசுப்பிரமணி யன், துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் , ஒப்பந்தக்காரர் கடம்பூர் கண்ணன் ,பொதுக்குழு உறுப்பினர் பி. ஆர்.பெருமாள், நிர்வாகிகள் புகழேந்தி, பில்லப்பன், உத்தமி, மாவட்ட அயலக அணி சதீஷ் ,தகவல் தொழில்நுட்ப அணி ராஜேஷ் ,தென்னரசு, அபி கிருஷ்ணன் அர்ஜுனன் ,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை துணை அமைப்பாளர் காளிமுத்து ,வர்த்தக அணி ருத்மா சரவணன் பிள்ளையார்பட்டி சதீஷ் ராமதாஸ் ,சோமு, உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். முதற்கட்ட பணியாக ரூபாய் 57 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பீட்டில் ஆபத்தாரணபட்டியில் இருந்து உலகினிபட்டி வரையிலும், அதனை தொடர்ந்து ஆபத்தாரனபட்டியில் இருந்து சிவகங்கை புறவழிச்சாலை இணைக்கும் சாலையாக மொத்தம் ரூபாய் 2 கோடியே 73 லட்சத்து 31ஆயிரம் மதிப்பீட்டில் அமைய உள்ளது . ஆபத்தாரனம்பட்டி மற்றும் சுற்றுப்புற கிராமமக்கள் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றி சாலைப் பணியினை துவக்கி வைத்த அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பனை கிராம மக்கள் ஆரத்தி எடுத்தும் குலவையிட்டும் உற்சாகமாக வரவேற்றார்கள்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திலீப் அழகிரி**
**மார்ச் 17 (2013)**



**திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரான பட்டுக்கோட்டை அழகிரியின் புதல்வரான இவர், தி.மு.க.வின் துவக்கக் கால உறுப்பினர்.**

**1965ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை தண்டணை பெற்றவர்.**

**பத்திரிகையாளராகவும், மொழிப்போர் தியாகிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததோடு, கழகப் பணியும் – சமுதாயப் பணியும் திறம்பட ஆற்றி ஏழை, எளிய மக்களுக்கு அருந்தொண்டாற்றியவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.